**குளியாபிடிய பிரதேச சபை - 2022**

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாபிடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து குளியாபிடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடுபொத்த இரண்டு மாடி வியாபார கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 133,440 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 53,750 தொகையான வங்கிவட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ரூபா 1,600,000 ஆக தலைமை அலுவலக வளவின் CCTV கமரா முறைமையின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 10,000 பெறுமதியான காணி இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 07 விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பெறுமதிக்கும் பட்டோலைகளைகளின் பெறுமதிக்குமிடையே ரூபா 228,395,229 வித்தியாசம் காணப்பட்டது.. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான பட்டோலை தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.. |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் 570 மற்றும் 571 | ரூபா 759,878 பெறுமதியான 145 காலங்கடந்த வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | வைப்பு மீதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 63,416,759 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 44,280,502 ஆகும்.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பல ஆண்டுகளாகக் காணப்பட்டு வரும் ரூபா 52,752 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல ஆண்டுகளாக காணப்பட்டு வரும் ரூபா 52,752 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 391 இன் பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளை துரிதமாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| I | வீத வரியும் வரியும் | 3,609 | 3,851 | 3,797 | 888 | 2,605 | 2,450 | 2,450 | 832 |
| II | வாடகை | 10,984 | 10,537 | 10,556 | 5 | 973 | 8,986 | 8,986 | 1,663 |
| III | அனுமதிப் பத்திர கட்டணம் | 1,160 | 1,065 | 1,065 | 0 | 803 | 803 | 803 | 0 |
| IV | ஏனைய வருமானம் | 15,669 | 19,100 | 17,867 | 329 | 443,398 | 443,398 | 439,692 | 266,023 |
| மொத்தம் | | 31,422 | 34,553 | 33,285 | 1,222 | 447,779 | 455,637 | 451,931 | 268,518 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வீதவரி மீதியானது 1 - 5 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம் தொடர்பாக ரூபா 381,960 மீதியும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 98,032 மீதியும் ஆக இருந்தது. | நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 05 ஆண்டுகளை மிகைத்த பழைய ஏக்கர் வரி மீதி ரூபா 278,989 ஆகும். | ஏக்கர் வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| **(இ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 12,199,963 தொகையும் முத்திரை கட்டணம் ரூபா 125,144,362 தொகையுமாகும். | முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய மீதிகளை துரிதமாக பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 70,255,161 ஆக இருந்ததுடன் அந்த மீதியினுள் 1-5 இற்கு இடைப்பட்ட ஆண்டுகள் காலமாக ரூபா 69,878,140 மீதியும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பழைய ரூபா 377,021 மீதியும் அறவிடப்படாது காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 10 கணக்கு மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 6,649,575 ஆக இருந்ததுடன் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் தொடர்பாக மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,096,729 மற்றும் முற்பெறுவனவுகள் ரூபா 453,663 ஆகும். 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீளச் செலுத்த வேண்டிய 7 வைப்பு விடயங்கள் தொடர்பான மொத்த பெறுமதி ரூபா 99,184 ஆகும். | -மேற்படி- | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்த:துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் மீன் பலகைகள், உணவுச்சாலை, குத்தகைக்கு வழங்கக்கூடிய விளைச்சலுள்ள 17 காணிகள் என்பவற்றை மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | அச்சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு நபரும் முன்வந்திருக்காமையின் அடிப்படையில் அச்சொத்துக்களை குத்தகைக்கு வழங்க முடியாதுள்ளது. | குத்தகைக்கு வழங்கக்கூடிய சொத்துக்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | சபையின் 107 மயானங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காணி கட்டிட நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்காததுடன் இயந்திர உபகரணங்கள், தளபாடங்களும் உபகரணங்களும், மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் | சொத்துக்கள் தொடர்பாக முழுமையான மீளாய்வு செய்ததன் பின்னர் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து சொத்துக்களும் பதிவேட்டிற்கு கொண்டுவரப்பட்டு நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பவற்றிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சபையின் காணிகள் தொடர்பாக முறைப்படியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் சபையின் தெரு விளக்கு தூாண்கள் அனைத்தும் முறைப்படியாக இலக்கமிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு நடவடிக்கை 2023 ஆகஸ்ட் மாதம் இறுதியளவில் பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பாதுகாப்பினை போதியளவில் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையிடம் 69 குழாய்க்கிணறுகள் காணப்பட்டதுடன் அவற்றில் 15 கிணறுகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன. | சபையின் 15 குழாய்க் கிணறுகள் செயற்படாதிருப்பதற்கு மரங்களின் வேர்களின் மூலம் நிலத்தின் கீழுள்ள குழாய்கள் மூடப்பட்டிருப்பதே காரணமாகும். | சொத்துக்களை உச்சஅளவில் பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டின் கீழ் ஆரம்பிப்பதற்கு இருந்த 2 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 535,806 செலுத்தப்பட்டிருந்தும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் மற்றும் ஆளுனரின் அங்கீகாரத்தின் பின்னர் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்திசெய்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 04 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 18 | நிதி அமைச்சின் மூலம் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி வழங்கப்பட்ட 03/2022 ஆம் இலக்க | பாதீட்டினை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் |

| | | |
|---|---|---|
| சதவீத்திலிருந்து 69 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமை மற்றும் 21 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 30 சதவீத்திற்கு மேற்பட்ட முரண்கள் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு சுற்றறிக்கையின் கீழ் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு நேரிட்டதன் அடிப்படையில் திட்டமிட்ட நிர்மாண வேலைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கருவியாக பயன்படுத்த வேண்டும். |